DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.

**Spl.S.C.No.13/2025**

**P.W.1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.தமிழ்செல்வன் |
| Father's Name | : | திரு.ராஜகோபால் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 30 |

(Accused is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of June 2025.

**<u>முதல் விசாரணை</u>**

நான் திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம் சீகம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் டிப்ளோமோ மெக்கனிக்கல் முடித்து விட்டு கொத்தனார் வேலை செய்கிறேன். நான் இந்து பறையர் சாதியை சேர்ந்தவன் ஆவேன். எதிரியை தெரியும். எதிரி இந்து கவுண்டர் சேர்ந்தவர் ஆவார். கடந்த 01.11.2024-ம் தேதி நானும், எனது நண்பர் மார்க்கண்டேயன் என்பவரும், ஆப்பாடிப்பட்டியில் உள்ள விநாயகர் கோவிலுக்கு சென்று அங்கு நடந்த மண்டக படியில் சாப்பிட்டு விட்டு வரும்போது உசிலை ஊரணி குமார் சலூன் கடை அருகே எனது நண்பர் மார்கண்டேயனை இறக்கி விட்டு விட்டு எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். அன்று இரவு சுமார் 9.15 மணி அளவிற்கு எனது நண்பர் மார்க்கண்டேயன் எனக்கு போன் செய்து நான் அவரை இறக்கி விட்ட இடமான உசிலை ஊரணி குமார் சலூன் கடை அருகே பழனிவேல் அடிப்பதாகவும், உடனே கிளம்பி வருமாறு சொன்னார்.

Approved

நான் உடனே புறப்பட்டு உசிலை ஊரணி குமார் சலூன் கடை அருகே சென்ற போது இருவரும் அடித்து கொண்டு இருந்தார்கள். நான் பழனிவேலிடம் ஏன் மார்க்கண்டேயனை அடிக்கிறாய் என்று கேட்டதற்கு நீ என்ன பெரிய ஆளு புண்டையா அவனுக்கு சப்போட் பன்ற பறை தேவிடியா புண்டா மகனே என்று திட்டிக் கொண்டே கையில் வைத்திருந்த கத்தியை வைத்து கொண்டு என் முதுகு, கழுத்தில் மற்றும் வலது, இடது தோள்பட்டையில் குத்திவிட்டான். (சாட்சி தனது சாட்டையை கழற்றி மார்பு, கழுத்து மற்றும் முதுகு பகுதியில் உள்ள காயத்தழும்புகளை காண்பிக்கிறார் மேலும் எதிரி தன் கையில் வைத்திருந்த இருசக்கர வண்டியின் சாவியால் வலது பக்க முதுகில் குத்தி விட்டான். எனது மார்பு எலும்பு உடைந்து விட்டது. நான் சத்தம் போடவும் அருகில் இருந்தவர்கள் வருவதை கண்டு எதிரி தன் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி கொல்லமால் விடமாட்டேன் என சொன்னார். எனது பெரியப்பா மகன் முனிகுமார் என்பவர் என்னை மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் அதன் பிறகு மணப்பாறையில் உள்ள சிந்துஜா தனியார் மருத்துவமனைக்கு என் தகப்பனார் சிகிச்சைக்கு அழைத்து சென்றார். நான் அங்கு சிகிச்சையில் இருக்கும் போது மணப்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளரிடம் சம்பவம் தொடர்பாக புகார் வாக்குமூலம் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் **அரசு தரப்பு சான்றாவணம் 1 ஆகும்.** என்னிடம் காட்டப்படும் கத்திதான் சம்பவத்தின் போது எதிரி என்னை குத்துவதற்கு பயன்படுத்தியது ஆகும். **அது அரசு தரப்பு சான்றுபொருள் 1 ஆகும்.** கடந்த 4.12.2024 அன்று திருச்சிராப்பள்ளி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 ல் சம்பவம் தொடர்பாக நான் வாக்குமூலம் அளித்தேன். நான் அளித்த வாக்குமூலம் **அரசு தரப்பு**

**சான்றாவணம் 2 ஆகும்.** காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை -இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

WebCopy